DINAMALAR

PAGE NO: 02 DATE: 17.12.2023

# புதுச்சேரி பல்கலையில் பரதநாட்டிய அகாடமி துவக்கம்



■ புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் பரதநாட்டிய அங்கீகார அகாடமியை துணை வேந்தர் (பொ) தரணிக்கரசு துவக்கி வைத்தார்.

**புதுச்சேரி, டிச. 17–**

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் பரதநாட்டிய அங்கீகார அகடமி துவக் கப்பட்டுள்ளது.

புதுச்சேரி பல்கலைக்கழக நிகழ்கலை துறையில், பரத நாட்டிய அங்கீகார அகாடமி எனும் புதிய மையம், சங்கமம் குளோபல் அகாடமியுடன் இணைந்து துவக்கப்பட்டுள்ளது.

புலமுதன்மையர் ஸ்ரீதரன் தலைமையில் இயங்கும் இந்த மையத்தை பொறுப்பு துணை வேந்தர் தரணிக்கரசு துவக்கி வைத்தார்.

விழாவில் காலச்சுவடு பதிப்பகம் வெளியீடாளர் வேலு சரவணனின் திபுலான் வாராதி எனும் சிறுவர் நாவலை துணை வேந்தர் வெளியிட பல்கலைக்கழக பதிவாளர் ராஜேஷ் பூட்டானி பெற்றுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் சங்கமம் குளோபல் அகாடமி நிறுவனர் தினேஷ்குமார், இயக்குனர் வெம்மணிசெல்வி, ஒருங்கிணைப்பாளர் உமா மகேஸ்வரி, பாரதியார் பல்கலைக்கூட பேராசிரியர் லூர்து சாந்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பரதநாட்டிய பயிற்சி நிறுவனங்கள் தங்களுடைய மாணவர்களின் தேர்ச்சிக்கான சான்றிதழ் பெற இந்த அகாடமியை அணுகலாம் என, புலமுதன்மையர் ஸ்ரீதரன் தெரிவித்தார்.

DINAKARAN

PAGE : 14

DATE: 17.12.2023

புதுவை பல்கலைக்கழகத்தில்

# பரதநாட்டிய அங்கீகார அகடமி துவக்கம்

புதுச்சேரி, டிச. 17: புதுவை பல்கலைக்கழகத்தின் நிகழ்கலைப்பள்ளியில் புதிதாக பரதநாட்டிய பயிற்சி அளித்து வரும் தனியார் பயிற்சி நிறுவன மாணவர்கள் பயன்பெரும் வகையில் புதுவை பல்கலைக் கழகத்தில் பரதநாட்டிய அங்கீகார அகடமி புதிய மையம் சங்கமம் குளோபல் அகடமியுடன் இணைந்து தொடங்கப்பட்டுள்ளது. இந்த மையத்தை புதுவை பல்கலைக்கழக துணை வேந்தர் (பொ) தரணிக்கரசு தொடங்கி வைத்தார். விழாவில் பல்கலைக்கழக பதிவாளர் (பொ) ராஜேஷ் பூட்டானி, சங்கமம் குளோபல் அகாடமி நிறுவனர் தினேஷ்குமார், இயக்குனர் வெம்மணிசெல்வி, ஒருங்கிணைப்பாளர் உமா மகேஸ்வரி, பாரதியார் பல்கலைக் கூட நடனத்துறை தலைவர் லூர்து சாந்தி மற்றும் நிகழ்கலைப்பள்ளி பேராசிரியர்கள், அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர். பரதநாட்டிய பயிற்சி நிறுவனங்கள் தங்களுடைய மாணவர்களின் தேர்ச்சிக்கான சான்றிதழ் பெற பரதநாட்டிய அங்கீகார அகாடமியை அணுகலாம் என புலமுதன்மையர் ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார். இவ்விழாவில் காலச்சுவடு ஆல் பதிப்பகம் வெளியீடான பேராசிரியர் வேலு, சரவணனின் திபுலான் வாராதி எனும் நாவலை துணைவேந்தர் வெளியிட்டார்.

MAALAI MALAR

PAGE NO: 08 DATE: 17.12.2023

## பல்கலைக்கழகத்தில் பரதநாட்டிய அகடமி



புதுவை பல்கலைக்கழகத்தின் நிகழ்கலை பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள பரதநாட்டிய அங்கீகார அகடமியை துணைவேந்தர் தரணிக்கரசு தொடங்கி வைத்தார். அருகில் பதிவாளர் ராஜேஷ் பூட்டானி, புலமுதன்மையர் ஸ்ரீதரன், சங்கமம் குளோபல் அகாடமி நிறுவனர் தினேஷ்குமார், இயக்குனர் வெம்மணிசெல்வி. ஒருங்கிணைப்பாளர் உமா மகேஸ்வரி, பாரதியார் பல்கலைக்கூட நடனத்துறை தலைவர் லூர்து சாந்தி ஆகியோர் உள்ளனர்.